9th March 1966]

Coimbatore District Mill Workers' Union, regarding partial closure of shifts in C.S. & W. Mills Ltd.; and

(b) if so, the steps taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) Yes, the representation has been examined by the Government. It is expected that the Mills would resume work shortly.

தொழிலாளர்கள் இழப்பீட்டுச் சட்டம்

* 226 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) Workmen's Compensation கமிஷனர்களுக்கு பிராசிகியூஷன் அதிகாரம் கொடுக்க சட்டத்தைத் திருத்தும் உத்தேசமுண்டா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) Sub-section (2) of Section 18-A of the Workmen's Compensation Act, 1923 already empowers the Commissioner for Workmen's Compensation to prosecute the defaulters for contravening the provisions specified in the said section. In view of this, the question of amending the Act for the said purpose does not arise.

MR. SPEAKER: Questions are over.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

III.—CALLING ATTENTION TO MATTER REGARDING DETENU SRI UMANATH, M.P.

* திரு. சா. கணேசன் : கனம் சபாநாயகர் அவர்களே, உங்களுடைய அனுமதியின் மீது இந்தச் சட்டசபை விதி 41-ன் படி கனம் முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கீழ்க்கண்ட விஷயத்தை நான் கொண்டு வர விரும்புகிறேன்.

பார்லிமென்ட் உறுப்பினரான கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கனம் உமாநாத் அவர்களைச் சென்னை சர்க்கார் கைது செய்து வைத்திருந்தும், பிறகு அவரை விடுதலை செய்த பிறகு அவர் தம்முடைய உரிமையாகிய பார்லிமென்ட் கூடத்திற்குச் செல்வதைத் தடை செய்திருப்பதாகவும், சென்னை சர்க்கார் அப்படிச் செய்யலாமா, செய்வது முறையா என்பது போன்ற வாதப் பிரதிவாதங்களை லோக் சபையில் எழுப்பி இருக்கிற காரணத்தால், இது ஒரு பார்லிமென்ட் உறுப்பினரின் உரிமை என்பது மட்டுமல்லாமல் சென்னை அல்லது மாநில சர்க்காரின் அதிகார வரம்பு, எல்லை முதலியவற்றை எல்லாம் கணிப்பதற்கு ஒரு காரணமாக இருப்பதாலும் இதைப்